[*1996 ஆகஸ்ட் 10*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *157*, திரு. டி. இராஜேந்தர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

157--

சட்டமன்ற நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல்

1366*--திரு. டி. இராஜேந்தர்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சட்டமன்ற நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்ப அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டமன்ற நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் ஒளிபரப்ப இயலாத நிலையில் தொலைக்காட்சித் துறை இருப்பதாக அதனுடைய இணை இயக்குநர் தெரிவித்து இருந்தார்கள். குறிப்பாக பார்லிமெண்டில் இதற்கு தனியாக ஒரு யூனிட் இயங்கி வருகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் அந்த நிலை இல்லாத காரணத்தால் எதிர்காலங்களில் அவைகளைக் குறித்து பரிசீலிக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கை சிவம்.

திரு. செங்கை சிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலங்களில் இதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். எந்தெந்த மாநிலங்களில் சட்டமன்ற நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் காட்டுகிறார்கள்? குறிப்பாக நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகிற பேச்சுகள் எல்லாப் பத்திரிகைகளிலும் முழுமையான செய்தியாக வருவதில்லை. பல நேரங்களில் அவை வருவதற்கு வாய்ப்பு இல்லை. எனவே சட்டமன்ற நிகழ்ச்சிகளை அந்தந்தத் தொகுதி மக்களும் பார்த்துத் தெரிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் இதனை மறு ஆய்வு செய்து, தொலைக் காட்சியில் சட்டமன்ற நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1996 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற நிகழ்ச்சிகளை மாத்திரம்தான் தற்போது தொலைக்காட்சியில் காட்டி வருகிறார்கள். தமிழகச் சட்டமன்றச் செய்திகளைப் பொறுத்தவரையில் செய்திகள், கேள்வி நேரத்தில் வெளியிடுகிற முக்கியமான தகவல்கள் எல்லாம் தொலைக் காட்சியிலும், வானொலியிலும் செய்தியாக வருகின்றன.. தினமும் பத்து நிமிட நேரம் 'சட்டமன்ற நிகழ்ச்சி' என்ற பெயரில் அந்த நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகிறது. அதுமாத்திரமல்லாமல், ஆளுநர் அவர்களின் உரையின் போதும், நிதி நிலை அறிக்கையின் போதும் நடைபெறுகிற முக்கியமான விவாதங்கள் குறித்தும் தொலைக்காட்சியிலும், வானொலியிலும் தொடர்ந்து செய்திகளைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதைப்போல சட்டமன்ற நிகழ்ச்சிகளில் முக்கியமான செய்திகள் அனைத்தும் எல்லாப் பத்திரிகைகளிலும் வந்து கொண்டுதான் இருக்கின்றன. ஏதாவது முக்கியமான செய்தி விடுபட்டிருக்குமானால் இதையே ஒரு வாய்ப்பாகக் கருதி பத்திரிகையாளர்கள் சட்டமன்றச் செய்திகளை வெளியிடும்போது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களின் செய்திகளும் இடம்பெறுகிற வகையில் வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவிலே இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு, ஒத்தி வைக்கலாம் என்று முடிவு எடுத்தது எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் தெரியும்.

வினா எண் *158*, திரு இரா. மதிவாணன். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

158--

சிங்காரவேலருக்குச் சிலை நிறுவுதல்

1713--**திரு. இரா. மதிவாணன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சிந்தனைச் சிற்பி "சிங்காரவேலர்" அவர்களுக்கு சென்னையில் சிலை நிறுவி மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை அரசு நிறைவேற்றுமா?